முருகப்பெருமான் துணை

**மகான் கௌசிகர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.11.2022**, செவ்வாய்கிழமை

1. தானென்ற செருக்கை மக்களுக்கு
தகர்த்து தன்னார்வத் தொண்டதனை
ஞானமாக வழங்கி காத்தருளும்
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது துலைதிங்கள்
வரங்களென மூவை திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **15** ம் நாள் **01.11.2022**, செவ்வாய்கிழமை)
வழங்குவேன் கௌசிகர் யானும்
3. யானும் அனுகூல ஆசிதனை
உலகோர் ஞானம்பெற உரைப்பேன்
ஞானமென பலவழிகள் தேடியே
நம்பிக்கை வளர்த்து முடிவு காணா
4. காணா தவிக்கும் மக்களே
கலியிலே போலி குரு மாயைபட
ஞானமென காலத்தை கடத்தி
நட்டமுற தானும் மடிந்து
5. மடிந்து பின் தன்வழி வருவோர்க்கு
மரணம் விளைகின்ற கலியிது
தேடி அலையா ஒரே தடம்
துறையூர் வாழ் ஞானி அரங்கன்
6. அரங்கனோ ஆறுமுகன் சக்தியான
ஆற்றல்மிக்க அவதாரமாகும்
அரங்கன் வாழ் பிரணவக்குடில்
அனுகி உலகோர் சரணடைந்து
7. அடைந்து சன்மார்க்கம் எனும்
அகிலம் காக்கும் சமதர்ம
தடையிலா உயர்நெறியை
தவமாக ஏற்று உலகோர்
8. உலகோர் அன்னதானமெனும்
உயர்வழியை சேவையாக
பழகித் தொடர் தொண்டாற்றி
பாருலகில் ஞானம் பயில
9. பயிலவே தரும பலத்தோடு
பழுதின்றி குருவருள் தானும்
தயவாகத் துணை தொடர்ந்து
தரணியில் ஞான சித்தி தரும்

10. சித்திதர பிறப்பின் ரகசியம்
சித்தமதில் விளங்கி நன்கு
உத்தமமாய் ஞானவான்களாக
உலகோர் சிறந்து இனிதே

11. இனிதே ஞானிகள் எனும்
இணையிலா மாற்றம் கண்டு
கனிவேலவன் காட்சிபெற்றுமே
கலியுகத்தை ஞானயுகமாக்குவர்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—